HA/3/7/28-7 2026.10.23

சகல மாவட்டச் செயலாளர்கள் /அரசாங்க அதிபர்கள்
சகல பிரதேச செயலாளர்கள்,

**நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக் கட்டளை - 2027 தொடர்பில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளுக்கு உரித்தான தீர்மானங்கள் அறிவித்தல்**

2027 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றக் கட்டளைக்கு எதிராக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளுக்கு உரித்தாக அமைச்சின் இடமாற்ற மேன்முறையீட்டுச் சபையினால் வழங்கியுள்ள பரிந்துரைகள் எனது அங்கீகாரத்துடன் இணைப்பு I இன் படி தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

02. அதன்படி, இந்த மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானங்களைக் கருத்திற் கொண்டு எனது இணையிலக்கம் மற்றும் 2026.09.17 மற்றும் 2026.09.24 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்ட இடமாற்றங்கள் பின்வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதுபற்றி தங்களது அலுவலகத்தில் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து நிச்சயிக்கப்பட்ட திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்குமாறு அவர்களுக்கு தெரிவிக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

| | |
|---|---|
| I. கிராம உத்தியோகத்தர் இடமாற்றம் -<br>II. நிர்வாக கிராம உத்தியோகத்தர் - இடமாற்றம் | பெயருக்கு முன்னால் அமுல்நடாத்தப்படும் திகதி குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அத்திகதி முதலும், ஏனைய சகல உத்தியோகத்தர்களினதும் இடமாற்றங்கள் 2027.01.01 ஆந் திகதி முதலும் அமுல்நடாத்தப்படும். |

03. தொடர்புடைய உத்தியோகத்தர்கள் புதிய கடமை நிலையத்தில் கடமைகளை பொறுப்பேற்க வசதியாக, குறித்த தினத்தில் தற்போதைய கடமை நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்றும், இந்த இடமாற்றங்கள் தாமதமின்றி குறித்த தினங்களில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் அறியத்தருகிறேன். மேலும், பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையிலான இடமாற்றங்களை அமுல்படுத்தும்போது, எனது இலக்கம் HA/3/2/5-3 தொகுதி II மற்றும் 2026.06.30 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கு மேலதிகமாக, பிரதேச செயலகப் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு புதியதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு எவ்வித தடையும் இருக்கக்கூடாது.

04. மேலும், இந்த கட்டளைகளுக்கு எதிராக எவரேனும் ஒரு உத்தியோகத்தர் பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடொன்றினை சமர்ப்பிப்பதாயின், அம்மேன்முறையீடு பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிக் கோவையின் XVIII ஆம் அத்தியாயத்தின் 256 ஆம் பிரிவின் பிரகாரம் மாத்திரமே சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அவற்றினை 2027.11.10 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளரின் ஊடாக அமைச்சுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

05. வருடாந்த இடமாற்றக் கொள்கையின் படி, மேற்கொள்ளப்பட்டுள்ள இடமாற்றங்களுக்கான பயணச் செலவுகள் மற்றும் குடியமர்வுப் படிகள் எதுவும் செலுத்தப்பட மாட்டாது என்பதனை மேலும் அறியத்தருகிறேன்.

டீ.டீ.சீ. அதுகோரல
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(கிராம உத்தியோகத்தர் நிர்வாகம்)

ஒப்பம்: எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு